**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**
**முன்னிலை : திரு மா. சந்திரமோகன்., பி.ஏ., பி.எல்.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி
திருவள்ளுவர் ஆண்டு 2056 விசுவாவசு வருடம் ஆடி திங்கள் 03-ம் நாள்
2025-ம் ஆண்டு ஜூலை மாதம் 19-ம் நாள் சனிக்கிழமை
*******

**இடைமனு எண். 4/2025-ல் அசல் வழக்கு எண். 152/2022**

1. லெட்சுமி
2. செந்தில்
3. சித்ரா ..மனுதாரர்கள்/வாதிகள்

...எதிர்..

1. வெங்கடேசன்
2. பழனியம்மாள் ...1,2 எதிர்மனுதாரர்/1,2 பிரதிவாதிகள்

3. மணிகண்டன்
4. கோமதி ....3,4 எதிர்மனுதாரர்/புதிதாக சேர்க்கப்படவேண்டி நபர்கள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 19.07.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு .R கார்த்திக்ராஜன் அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S.முத்துக்குமார் அவர்களும் இருதரப்பு வாதுரையைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்

**உத்தரவு**

மனுதாரர்கள்/வாதிகள் அசல் வழக்கின் பிராதை திருத்த செய்ய அனுமதி கோரி இம்மனு உ.வி.மு.ச.கட்டளை-6, விதி-17-ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்**

மனுதாரர் அசல் வழக்கின் 1ம் வாதி. 2 மற்றும் 3 வாதிகள் அவரது மகன் மற்றும் மகள்கள் ஆவார்கள். இந்த மனுவை தாக்கல் செய்திருக்கிறார் மனுதாரர்/வாதி எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது விளம்பல் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கினை தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்கு நிலுவையில் இருக்கும்போது சொத்தை 3, 4 எதிர்மனுதாரர்கள் ஆக்கிரமித்துவிட்டதினால் அவர்களை வழக்கின் தரப்பினர்களாக சேர்க்கக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனு IA.No.3/2023 ஆக இந்நிலையில் கோப்பில் எடுக்கப்பட்டு கடந்த 05.02.2025 ல் இம்மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்த அசல் வழக்கை திருத்தம் செய்ய உத்தரவிடவேண்டியது அவசியமாகவும், நியாயமாகவும் என இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே மனுதாரர்/வாதி அசல் வழக்கின் பிராதை திருத்தம் செய்ய அனுமதி கோரி தாக்கல் செய்துள்ள இம்மனுவினை அனுமதிக்க வேண்டும்.

2. எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிர்உரை இல்லை என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

**3. இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை**

4. மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கதக்கதா?

5. இம்மனுவில் மனுதாரர்கள்/வாதிகள் மற்றும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**6. தீர்வு:**

இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர்கள்/வாதிகள், மனுதாரர் தரப்பில் கற்றிந்த வழக்கறிஞர் மேற்படி சில வழக்கு நிலுவையில் இருக்கும்போது 3,4 எதிர்மனுதாரர்கள் வழக்கு சொத்தை ஆக்கிரமித்து விட்டதினால் அவர்களை

இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கக்கோரி இடைநிலை மனு தாக்கல் செய்யப்பட்டு அந்த மனு நிலுவையில் கடந்த 05.12.2025 அன்று அமல்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி இந்த அசல் வழக்கை திருத்தம் செய்ய உத்தரவிடவேண்டியது அவசியமாகவும், நியாயமாகவும் என இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே மனுதாரர்/வாதி அசல் வழக்கின் பிராதை திருத்தம் செய்ய அனுமதி கோரி தாக்கல் செய்துள்ள இம்மனுவினை அனுமதிக்க வேண்டும்.

i) எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை இல்லை என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது. வழக்கு ஆவணங்கள் கவனத்துடன் பரிசீலனை செய்யப்பட்டு, இந்த அசல் வழக்கு நிலுவையில் இருக்கும்போது 3,4 எதிர்மனுதாரர்கள் வழக்கு சொத்தை ஆக்கிரமித்து விட்டதினால் அவர்களை வழக்கின் தரப்பினர்களாக சேர்க்கக்கோரி மனு தாக்கல் செய்யப்பட்டு அந்த மனு சமூக நீதிமன்றத்தில் கடந்த 05.02.2025 அன்று அமல்படுத்தப்பட்டுள்ளதால், மேலும், இந்த அசல் வழக்கினை திருத்தம் செய்ய கோரியுள்ள இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவது என்று இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

முடிவில், இம்மனு செலவுத்தொகையின்றி அனுமதிக்கப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2025–ம் ஆண்டு ஜூலை மாதம் 19–ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

(ஓம்/– M.சந்திரமோகன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

**<u>பின் இணைப்பு</u>**

| | |
|---|---|
| <u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u> | – இல்லை – |
| <u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u> | – இல்லை – |
| <u>எதிர்மனுதார் தரப்பு சாட்சிகள்</u> | – இல்லை – |
| <u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u> | – இல்லை – |

(ஓம்/– M.சந்திரமோகன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

நேரிய/வரைவு உத்தரவு
இடைமனு எண்.4/2025–ல்
அசல் வழக்கு எண்.152/2022
நாள்–19.07.2025.